**பிரிவு ஆ : இலக்கணம்**
**[ கேள்விகள் 11 - 20 ]**
**[ 10 புள்ளிகள் ]**
[பரிந்துரைக்கப்படும் நேரம் 15 நிமிடம்]

11.சரியான நிறுத்தற்குறிகளைத் தெரிவு செய்க.

அம்மா பூக்களைப் பறித்தார் ◯ மாலையாகத் தொடுத்தார் ◯ இறைவனுக்குச் சூட்டினார்.

A. ; ;
B. : ,
C. , ,
D. , .

12.**முன்னிலை** வாக்கியத்தைத் தெரிவு செய்யவும்.

A. நீ நேற்று எங்குச் சென்றாய்?
B. மாமா வெளியே சென்றுள்ளார்.
C. மீனா ஓவியம் வரைந்தாள்.
D. நான் நூல்நிலையம் சென்றேன்.

13.பின்வருவனவற்றுள் எந்தத் தொடர் **வலிமிகாது?**

A. தீ + சட்டி
B. அறிந்து + கொண்டார்
C. வெள்ளை + தாள்
D. மலர் + கை

14.**மெல்லின மெய்யெழுத்துச்** சொல்லைத் தேர்ந்தெடுக்கவும்.

A. தந்தம்
B. யாழ்
C. விளக்கு
D. பற்கள்

15.கொடுக்கப்பட்டுள்ள செயப்பாட்டுவினை வாக்கியத்திற்கு ஏற்ற **செய்வினை வாக்கியத்தைத்** தெரிவு செய்யவும்.

| |
|---|
| புகழ்பெற்ற சிலப்பதிகாரக் காப்பியம் இளங்கோவடிகளால் எழுதப்பட்டது. |